தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 13-10-2014

ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**வேளாண் பல்கலையில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி**

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வுப் பேரணி 11-10-2014 அன்று தேசிய மாணவர் படை தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் கோயம்புத்தூரில் முதல்வர் முனைவர். மகிமைராஜா அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவர்கள், தேசிய மாணவர் படை அலுவலர்கள் வழிநடத்த, மழைநீர் சேகரிப்பைப் பற்றி விழிப்புணர்வு உண்டாக்கும் வாக்கியங்களைச் சுமந்த பலகைகளைக் கையிலேந்தி மக்களிடையே விழிப்புணர்வு உண்டாக்க பேரணியாக வலம் வந்தனர்.

இன்றைய சூழலில் மழைநீரை சேகரிப்பது பற்றிய முக்கியத்துவம் மற்றும் அச்சேகரிப்பின் கட்டாயம் ஆகியவற்றை வலியுறுத்தும் வகையில், இப்பேரணி அமைந்தது. மேலும் மாணவர்களுக்கு பலவகையான மழைநீர் சேமிப்பு முறைகள் பற்றியும் செயல்விளக்கம் காண்பிக்கப்பட்டது. தேசிய மாணவர் படை பிரிவின் அதிகாரிகள் லெப்டினனட் முனைவர் சு. மனோன்மணி மற்றும் லெப்டினனட் முனைவர் கு.ம. செல்லமுத்து ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

மக்கள் தொடர்பு அலுவலர்